**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029408

1. District மாவட்டம் : தருமபுரி    PS: காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு    Year: ஆண்டு: 2018    FIR No.: மு.த.அ. எண்: 1/AC/2018    Date: நாள்: 18.4.2018

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம்    Sections பிரிவுகள்: 120B

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988    Sections பிரிவுகள்: 7

   (iii) Act சட்டம்: -    Sections பிரிவுகள்: -

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை 27.4.2017 21.12.2017 மதியம் 12 மணி

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை 13.04.2018 மதியம் 14.30 மணி 18.04.2018 மதியம் 13.30 மணி மாலை 16.45 மணி

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.04.2018    Time : நேரம் பகல் 12.15 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் -    Time : நேரம் -

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ : எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மாவட்ட தொழில் மையம் சுமார் 5 கி.மீ கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் -    (b) Address : முகவரி -

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -    District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. ச. சாம்சோரி    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சேகர்

   (c) Date / Year of Birth தாள் / பிறந்த ஆண்டு 38 வயது    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் -    Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

   (f) Occupation : தொழில் சேவை    (g) Address : முகவரி த. எண். 5/464, நாச்சியார் கொட்டாய் கிராமம், அதியமான் கோட்டை, தருமபுரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. மனோகரன், உதவி இயக்குநர், மாவட்ட தொழில் மையம், தருமபுரி.
   2) திரு. ரமேஷ், பொதுமேலாளர், மாவட்ட தொழில்மையம், தருமபுரி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   மேல் விசாரணை மேற்கொள்ளப்பட்டதால் காலதாமதம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………. Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
S. Ramkumar 19/4/18

S. [signature] DSP 19/04/18
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.4.2018 at 10.15 hrs

Name: பெயர் S. SUBRAMANIAN
Rank: நிலை DSP ………No. எண் ……….
VAC, Dharmapuri

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.1/AC/2018 u/s 120B IPC and 7 of PC Act 1988 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

* * * * *

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை, நரசகவுண்டர் கொட்டாய் கதவு எண். க.எண்.5/464 என்ற முகவரியைச் சேர்ந்த சோமு மகன் திரு. S.இராம்குமார், வயது 38 என்பவர் 18.04.2018 ம் தேதி பகல் 12.15 மணிக்கு தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி, காவல் துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளியில் மதர்வாஷ் கிளாத்கேர் என்ற பெயரில் உலர் துணி சலவையகத்தை கடந்த ஒருவருடமாக நடத்தி வருகிறேன். நான் தொழில் தொடங்குவதற்காக திட்ட மதிப்பீடு ரூ.44 இலட்சமாகும், அதில் ரூ.30 இலட்சத்தை NEEDS திட்டத்தின் கீழ் கடன் வழங்ககோரி தருமபுரி மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் அவர்களுக்கு 16.02.2016ந்தேதி உரிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பத்திருந்தேன். என்னுடைய விண்ணப்பம் மாவட்ட தொழில்மையத்தில் ஏற்கப்பட்டு எனது விண்ணப்பத்திற்கு 2016/005/00559/RASS என்ற பதிவெண் வழங்கப்பட்டது. அதன்பிறகு தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் நடைபெற்ற District Task Force Committee – யால் நான் இந்த திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் பெற தகுதியான நபர் என தேர்வு செய்யப்பட்டேன். G.O (Ms) No.49 ( Micro Small and Medium Enterprises Department) dated 29.10.2012 –ன்படி கடன் தொகையில் 25 சதவீதம் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த 08.08.2016ந்தேதியன்று மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் அவர்கள் தருமபுரி பாரத ஸ்டேட் வங்கி கிளை மேலாளர் அவர்களுக்கு பரிந்துரை செய்த கடித எண்.Needs No 517/A2/2016-17 படி என்னுடைய திட்ட மதிப்பீடான ரூ44 இலட்சத்தில் அனுமதிக்கப்பட்ட கடன்தொகை ரூ.30 இலட்சத்திற்கு மானியம் ரூ.7.5 இலட்சம் வழங்குமாறு பரிந்துரைத்துள்ளார். அந்த கடிதத்தில் விண்ணப்பதாரர் EDP பயிற்சி முடித்தபிறகு கடன் தொகை வழங்குமாறும், அதன்பின்பு மானிய தொகையை மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு பரிந்துரைத்துள்ளார். நான் 20.06.2016 ந்தேதி முதல் 24.09.2016ந்தேதி வரை இந்த திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள NIFT-TE College of Knitwear Fashion என்ற தமிழக அரசின் சார்பாக வழங்கப்பட்ட EDP பயிற்சி முடித்தேன். அதற்கான சான்றிதலும் வழங்கப்பட்டது. அதன்படி எனக்கு 24.04.2017–ந்தேதியிலிருந்து மூன்று தவணையாக பல்வேறு தேதிகளில் எனது தருமபுரி பாரத ஸ்டேட் வங்கி ( லோன் அக்கவுண்ட் எண்.36809385779) என்ற கணக்கு மூலமாக எனக்கு மெஷினாரிஸ் வழங்கிய Sunrise Garment Machinery Pvt, Ltd., Bangaluru என்ற கம்பெனிக்கு காசோலை மூலம்

வழங்கப்பட்டுள்ளது. எனக்கு முதல் தவணை கடன் தொகை வழங்கப்பட்ட பிறகு அதற்கான அனுமதி கடிதத்தை பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து பெற்று கொண்டு 27.04.2017ந்தேதி மாவட்ட தொழில்மைய பொதுமேலாளரை நேரில் சந்தித்து கொடுத்தேன். அப்போது மாவட்ட தொழில்மைய அலுவலகத்தில் பணிபுரிந்த உதவி பொறியாளர் திரு.மனோஜ்தரன் அவர்கள் என்னுடைய ஆவணங்களையெல்லாம் பரிசீலனை செய்து மானிய தொகை ரூ.3.75 இலட்சம் வழங்கவேண்டுமென்றால் அந்த தொகையில் 15 சதவீதம் தனக்கு தனியாக தரவேண்டும் என்று கேட்டார். நான் அவ்வளவு தொகை தரமுடியாது, இப்போது தான் புதியதாக தொழில் தொடங்கியுள்ளேன், அதனால் கம்பெனி செலவு அதிகமாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.20 ஆயிரமாவது கொடுத்தால் தான் மானிய தொகை வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று சொன்னார். நான் எவ்வளவோ கெஞ்சி கேட்டும் அவர் ஒத்து கொள்ளவில்லை, எனக்கு அப்போது அவசரமாக பணம் தேவைப்பட்டதாலும், பணத்தை தரவில்லையென்றால் மானியத்தை வேறு பயனாளிக்கு மாற்றிவிடுவதாக சொல்லி என்னை பயமுறுத்தியதாலும், வேறு வழியின்றி அவர் கேட்ட பணம் ரூ.20 ஆயிரத்தை அப்போது கொடுத்தேன். அதன்பின்பு அன்றைய தினமே என்னுடைய வங்கி கணக்கில் மானிய தொகை ரூ.3.75 இலட்சம் வரவு வைக்கப்பட்டது. இரண்டாவது தவணை மானிய தொகையான ரூ.3.75 இலட்சம் எனக்கு மாவட்ட தொழில்மையத்தின் மூலம் இன்னும் வழங்கவேண்டி உள்ளது. மீண்டும் வங்கியிலிருந்து எனக்கு கடன் வழங்கியதற்கான அனுமதி கடித்தை பெற்று கொண்டு மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் அவர்களிடம் 21.12.2017ந்தேதி உரிய ஆவணங்களுடன் எனக்கு நிலுவையில் உள்ள மானிய தொகை ரூ.3.75இலட்சத்தை வழங்குமாறு கோரி சமர்ப்பித்தேன். இதுதொடர்பாக உதவி பொறியாளர் திரு.மனோஜ்தரன் அவர்கள் அன்றைய தினமே சுமார் 12 மணியளவில் அவரை நான் சந்தித்தபோது அவர் என்னுடைய ஆவணங்களை பரிசிலனை செய்துவிட்டு இரண்டாவது மானிய நிலுவை ரூ.3.75 வழங்க மீண்டும் அவருக்கு தனியாக ரூ.35 ஆயிரத்தை கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் இந்த முறை அவ்வளவு பணத்தை கண்டிப்பாக தரமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த பணத்தை கொடுக்கவில்லையென்றால் மானிய தொகையை வழங்க ஏற்பாடு செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார். இது தொடர்பாக அவரை பலமுறை அவரது அலுவலகத்தில் சந்தித்து கேட்டபோது, பணம் இல்லாமல் எந்த வேலையும் ஆவாது, interest subsidy-யும் வழங்கமுடியாது என்று சொல்லிவிட்டார். மீண்டும் அவரை கடந்த 13.04.2018ந்தேதி மதியம் 02.30 மணியளவில் அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்து என்னால் ரூ.35 ஆயிரத்தை ரெடி பண்ண முடியவில்லை, கொஞ்சம் பெரியமனசு பண்ணுங்க என்று கேட்டேன். அப்போது எனக்கும் அவருக்கும் சற்று வாக்குவாதம் வந்ததால் அருகிலிருந்த பொதுமேலாளர் திரு.இரமேஷ் அவர்கள் தலையிட்டு சரி ரூ.25 ஆயிரத்தை கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார். அதற்கு உதவி பொறியாளர் திரு.மனோஜ்தரன் அவர்களும் ஒப்புகொண்டார், அதற்கு பிறகு உதவி பொறியாளர் அவர்கள் ரூ.25 ஆயிரத்திலிருந்து ஐந்து பைசா கூட

என்னால் குறைக்க முடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். உதவி பொறியாளர் திரு.மனோஜ்தரன் அவர்கள் என்னிடம் இலஞ்சமாக கேட்ட ரூ.25 ஆயிரத்தை கொடுத்து என்னுடைய வேலையை முடிக்க எனக்கு விருப்பம் இல்லை, அதனால் அவர்கள் இருவர் மீதும் ஊழல் தடுப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தேன், எனக்கு தொழில் நிமித்தம் காரணமாக நான் அடிக்கடி வெளியூர் சென்றுவிட்டபடியால் அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் புகார் கொடுக்க என்னால் உடனடியாக வர இயலவில்லை. அதனால் இன்று தங்களிடம் ஆஜராகி அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்ககோரி இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். ஆகவே என்னிடம் இலஞ்சம் கேட்ட உதவி பொறியாளர் மற்றும் பொதுமேலாளர் ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம்.S.Ramkumar. Sir, Received the complaint on 18.04.2018 at 12.15 hrs and a copy was sent to DVAC by FAX requesting to order for a Preliminary enquiry in order to verify whether any cognizable offence made out into the allegation. Sd.xxx 18.04.2018, Deputy Supdt of Police, V&AC, Dharmapuri.

Sir, A Preliminary Enquiry was registered against the accused officers (A.O-1) Tr.Manojdharan, Assistant Engineer, District Industrial Centre, Dharmapuri and (A.O-2) Tr.Ramesh, General Manager, District Industrial Centre, Dharmapuri as per the orders of the DVAC vide memo in PE.110/2018/I&C/DP on 18.04.2018 at 13.15 hrs. Sd.xxx 18.04.2018, Deputy Supdt.of Police, V&AC, Dharmapuri.

During the Preliminary Enquiry, the informant Tr.S.Ramkumar was instructed to meet the AOs on 18.04.2018 and to request them to arrange for the release of Rs.3.75 Lakhs towards 2nd installment of subsidy and then come to the office. Sd.xxx 18.04.2018, Deputy Supdt.of Police, V&AC, Dharmapuri.

Sir, today 19.04.2018 at 07.00 hrs the informant S.Ramkumar appeared before me and stated that on 18.04.2018 at 13.30 hrs, he met AO-2 Tr.Ramesh, General Manager and apprised him of the earlier demand Rs.25,000/- made by A.O-1 Tr.Manojdharan and requested him to reduce the amount for which A.O-2 Tr.Ramesh contacted A.O-1 Tr.Manojdharan over his mobile phone and spoke with him and after that he directed the informant to come after sometimes as A.O-1 Tr.Manojdharan had gone for lunch. He further stated that again at about 16.45 hrs and he met both AOs Tr.Manojdharan and Tr.Ramesh at their office and expressed his inability of arranging such huge sum of Rs.25,000/- and requested them to reduce the amount, for which A.O-2 Tr.Ramesh told that he would have paid

Rs.36,000/- but their demand is only Rs.25,000/- and it cannot be reduced and A.O-1 Tr.Manojdharan also agreed to the negotiation and both AOs directed to the informant to come with the amount of Rs.25,000/- after making a phone call to A.O-1 Tr.Manojdharan, today 19.04.2018. As instructed, the informant recorded the conversation while meeting the AOs at their office in his mobile phone. The conversation was heard carefully and he indentified the voices of the AOs.

During the Preliminary enquiry it discloses that a cognizable offence is made out against the AOs Tr.Manojdharan, Assistant Engineer and Tr.Ramesh, General Manager. Therefore, a case in Dharmapuri V&AC Cr.No.1/AC/2018 u/s 120B IPC and 7 of PC Act 1988 was registered on 19.04.2018 at 07.30 hrs against both accused officers, after getting prior concurrence from DVAC over phone. The original FIR and computer typed petition of Tr.S.Ramkumar are sent to the honorable Special Judge/Chief Judicial Magistrate, Dharmapuri on 19.04.2018 at 10.15 hrs. The remaining copies were sent to the officers concerned. Sd.xxx 19.04.2018, Deputy Supdt.of Police, V&AC, Dharmapuri.

S. [signature]
DSP, VAC, Dharmapuri
19/04/2018